**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கரூர்**
**முன்னிலை – திரு.எஸ்.பி.பரத் குமார், M.B.A.,L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**
**2026 ம் வருடம், பிப்ரவரி மாதம், 12 ம் நாள், வியாழன் கிழமை**
**குற்றவியல் பல்வகை மனு எண். 125/2026**
**சுருக்கு வழக்கு எண்.281/2026**

முருகேசன் (50/26)

த/பெ. மாணிக்கம்

மனுதாரர் / எதிரி / வழக்கு சொத்தின் உரிமையாளர்

/ எதிர் /

தமிழக அரசுக்காக,

காவல் உதவி ஆய்வாளர்,

தாந்தோன்றிமலை காவல் நிலையம்,

(குற்ற எண். 40/2026) எதிர்மனுதாரர் / குற்றமுறையிடுபவர்

**உத்தரவு**

1. மேற்படி வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தினை மனுதாரர் / வழக்கு சொத்தின் உரிமையாளரின் பாதுகாப்பில் ஒப்படைக்க வேண்டுமென கோரி BNSS பிரிவு 497 r/w 503– ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. தாந்தோன்றிமலை காவல் நிலைய குற்ற எண்.40/26 பிரிவு 7(3) LR ACT என்ற வழக்கில், வழக்கு சொத்தான TN 47 AM 3155 TVS XL 100 இருசக்கர வாகனமும், JIO செல்போன் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கு சொத்து மனுதாரருக்கு உரிமையானது என்றும், ஆகவே செல்போனை தன் வசம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாரர் மனுவில் கோரியுள்ளார்.

3. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான TN 47 AM 3155 TVS XL 100 இருசக்கர வாகனமும், JIO செல்போன் ஒன்றும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, ஆர்.பி.எண்.191/2026 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மனுச் சொத்து மனுதாரருக்கு உரிமையானது என்பது வழக்காவணங்களை ஆய்வு செய்கையில் தெரிய வருகிறது. மேற்படி வழக்கானது 12.02.2026ம் தேதி முடிவுற்ற நிலையில் தீர்ப்புரையில் TN 47 AM 3155 TVS XL 100 இருசக்கர வாகனமும், JIO செல்போன் ஒன்றும் உரிமையாளர் மனுத்தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுக் கொள்வதை அவரே வைத்துக்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே வழக்கு சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க உத்தரவிட்டும், மேலும் மேற்படி வழக்கு சொத்தை எந்த ஒரு குற்ற செயல்களுக்கும் ஈடுபடுத்தக் கூடாது என்றும் உத்தரவிட்டு இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ம் நாளாகிய இன்று அவையறிய என்னால் பகரப்பட்டது.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**